DAILY THANTHI

PAGE NO: 11

DATE: 11.05.2023

### புதுவை பல்கலைக்கழகத்தில் சேர

# 'கியூட்' தேர்வுக்கு விண்ணப்பிக்க இன்று கடைசிநாள்

புதுச்சேரி, மே.11-

புதுவை பல்கலைக்கழகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

புதுவை பல்கலைக்கழகத்தில் முதுகலை பட்டபடிப்பில் சேர 'கியூட்' தேர்வுக்கு விண்ணப்பிக்க ஆன்லைன் பதிவு மீண்டும் திறந்துள்ளது. ஏற்கனவே தங்களது பதிவினை முழுமையாக முடிக்காதவர்களும், புதியதாக விண்ணப்பிப்பவர்களும் இன்று (வியாழக்கிழமை) இரவு 9 மணிக்குள் (*https://cuet.nta.nic.in/*) பதிவு செய்யலாம்.

விண்ணப்பதாரர்கள் தங்களது பாடப்பிரிவுகளின் எண்களை கவனமாக பதிவு செய்யவேண்டும். அதுகுறித்த விவரங்கள் புதுவை பல்கலைக்கழக தகவல் குறிப்பேட்டில் (*www.pondiuni.edu.in/admissions*) உள்ளது. விண்ணப்பதாரர்கள் தேசிய தேர்வு முகமையின் இணையதளத்தை அவ்வப்போது பார்வையிட்டு கொள்ளவேண்டும். ஆன்லைன் விண்ணப்பத்தில் உள்ள குறைகளை நாளையும் (வெள்ளிக்கிழமை) நாளை மறுநாளும் (சனிக்கிழமை) சரி செய்துகொள்ளலாம்

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

DINAKARAN

DATE: 11.05.2023 PAGE NO: 15

# முதுகலை படிப்புக்கு விண்ணப்பிக்க கால அவகாசம்

புதுச்சேரி, மே 11: புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் முதுகலை பட்டப்படிப்புக்கான க்யூட் நுழைவுத் தேர்வுக்கான ஆன்லைன் விண்ணப்பங்கள் கடந்த மார்ச் மாதம் 20ம் தேதி தொடங்கி, ஏப்ரல் மாதம் 19ம் தேதியுடன் முடிவடைந்தது. இந்நிலையில் புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் வழங்கும் அனைத்து முதுகலை பட்டப்படிப்புக்கு மீண்டும் விண்ணப்பிக்க கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. முன்னதாக பதிவை முடிக்க முடியாத விண்ணப்பதாரர்கள் மற்றும் புதிய விண்ணப்பதாரர்களும் இன்று (11ம் தேதி) இரவு 9 மணி வரை *https://cuet.nta.nic.in/* என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.

DINAMALAR

DATE: 11.05.2023 PAGE NO: 07

# புதுச்சேரி பல்கலையில் சேர இன்று வரை விண்ணப்பிக்கலாம்

**புதுச்சேரி, மே 11–**

புதுச்சேரி பல்கலையில் முதுகலை மற்றும் பட்டய படிப்புகளுக்கு இன்று வரை விண்ணப்பிக்கலாம்.

பல்கலைக்கழக உதவி பதிவாளர் மகேஷ் செய்திக்குறிப்பு:

தேசிய தேர்வு முகமை நடத்தும் பல்கலை பொது நுழைவுத் தேர்வு கியூட் (பி.ஜி) – 2023ன் அடிப்படையில் புதுச்சேரி பல்கலையில் பல்வேறு முதுகலை மற்றும் பட்டய படிப்புகளில் சேரலாம்.

இதற்கான விண்ணப்பங்கள் கடந்த மார்ச் 20ம் தேதி முதல் கடந்த 5ம் தேதி வரை இணைய வழியில் பெறப்பட்டது.

இந்நிலையில் மாணவர்களின் கோரிக்கையை ஏற்று பல்வேறு முதுகலை மற்றும் பட்டயப் படிப்புகளுக்கு ஆன்லைன் விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிக்க, காலக்கெடு இன்று 11ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களில் திருத்தங்களை நாளை முதல் 13ம் தேதி வரை செய்யலாம்.

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

TAMIL MURASU

11 MAY 2023

PAGE 2

# முதுகலை படிப்புக்கு விண்ணப்பிக்க கால அவகாசம்

புதுச்சேரி, மே 11-

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் முதுகலை பட்டபடிப்புக்கான க்யூட் நுழைவுத் தேர்வுக்கான ஆன்லைக் விண்ணப்பங்கள் கடந்த மார்ச் மாதம் 20ம் தேதி தொடங்கி, ஏப்ரல் மாதம் 19ம் தேதியுடன் முடிடைந்தது. இந்நிலையில் புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் வழங்கும் அனைத்து முதுகலை பட்டப்படிப்புக்கு மீண்டும் விண்ணப்பிக்க கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் முன்னதாக பதிவை முடிக்க முடியாத விண்ணப்பதாராகள் மற்றும் புதிய விண்ணப்பதாரர்களும் இன்று (11ம்தேதி) இரவு 9 மணி வரை *https://cuet.nta.nic.in/* என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம் என தெரிவித்துள்ளது.